30th January 1961]

Sri N. K. PALANISAMI : எந்தெந்த தொழில்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் அதில் சேர்க்கப்படுவார்கள்? அல்லது எல்லாத் தொழிலாளர்களுக்கும் அதில் இடம் தரப்படுமா? இல்லையானால் குறிப்பிட்ட தொழில் செய்யும் தொழிலாளர்களுக்கு மட்டும் அதில் தங்க வசதியிருக்கிறதா?

The Hon. Sri R. VENKATARAMAN : பொதுவாக பாக்டரி ஓர்க்கர்ஸ்காக இது ஏற்படுத்தப்படவிருக்கிறது.

Sri J. MATHA GOWDER : தொழிலாளர்கள் விடுமுறை இல்லம் குன்னூரில் கட்ட மத்திய அரசாங்கம் சிபார்சு செய்திருக்கிறது என்று கேள்விப்பட்டேன். அது உண்மையா? அப்படியானால் குன்னூரில் கட்ட அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

The Hon. Sri R. VENKATARAMAN : மத்திய அரசாங்கம் சிபார்சு செய்யவில்லை. நம் அரசாங்கம்தான் அப்படி யோசனை செய்து கொண்டிருக்கிறது. அது இரண்டாவதாக எடுத்துக் கொள்ளப்படலாம்.

Sri N. K. PALANISAMI : இதில் தங்கும் தொழிலாளர்களிடமிருந்து ஏதாவது கட்டணம் வசூலிக்கப்படுமா? அல்லது ஆகக்கூடிய செலவை சர்க்காரே ஏற்றுக்கொள்ளுமா?

The Hon. Sri R. VENKATARAMAN : இவையெல்லாம் கட்டி முடிந்தவுடன் அல்லது முடியும் சமயத்தில் பரிசீலனை செய்யலாம்.

Stand-in buses

* 245 *Q.*—Sri T. S. RAMASWAMI (on behalf of Sri K. SATTANATHA KARAYALAR) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to have a fleet of ' Stand-in ' buses with standing accommodation to clear passengers during peak hours, and;

(*b*) if so, when it will be given effect to?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

Tobacco

* 246 *Q.*—**Sri S. M. ANNAMALAI (on behalf of Sri M. P. SARATHI)** கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ல் புகையிலை பயிரிடும் முறை, பதனிடும் முறைகள் பற்றிய பயிற்சிக்காக யாழ்ப்பாணத்துக்கு எத்தனை அதிகாரிகள் அனுப்பப்பட்டனர்?

(இ) அவர்கள் எத்தனை நாட்கள் பயிற்சி பெற்றனர்?